

புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பே.மாரிஅய்யா அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கூட்டம் மற்றும் நலத்திட்டஉதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மா.தமிழ் அய்யா ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், கனிம வளத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முன்னதாக அவரது நினைவு இடத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், சி.சண்முகம் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



திருப்பூர் மாநகராட்சி, மண்ணரை செனியப்பநகர், சண்முகதேவர் முத்தம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். இதில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சுகாதார உள்கட்டமைப்பினை உருவாக்க – ஒன்றிய அரசு

# நிதி உதவியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு உருவாக்கம், நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி

அவரது கேள்வி வருமாறு:-

இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு WHO நிர்ணயித்த 1,000 பேருக்கு 3.5 படுக்கைகள் என்ற விதிமுறையை விட மிகக் குறைவாக உள்ளது என்பது உண்மையா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

நாட்டில் தற்போதைய மக்கள் தொகை படுக்கைகள் விகிதத்தின் விவரங்கள், மாநில வாரியாக;

நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நோயாளிமருத்துவர் விகிதம், நோயாளிசெவிலியர் விகிதம், படுக்கைகள் மக்கள் தொகை விகிதம் ஆகியவற்றில் WHO விதிமுறைகளுக்கு இணங்க அரசு எடுத்த நடவடிக்கைகள்; மற்றும் இது தொடர்பாக அனைத்து ஒன்றிய துறை திட்டங்கள் மற்றும் ஒன்றிய மாநில திட்டங்களுக்கான நிதி உதவியை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு

இந்திய பொது சுகாதார தரநிலைகள் (IPHS 2022) படி 1000 மக்கள்தொகைக்கு 1 படுக்கை வழங்க பரிந்துரைக்கிறது. IPHS விதிமுறைகளின்படி 20000 முதல் 30000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 6 உட்புற/கண்காணிப்பு படுக்கைகளுடன் கூடிய



ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் ஆரம்ப சுகாதார மையம் (AAMPHC) 80,000 1,20,000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 30 படுக்கைகளுடன் கூடிய சமூக சுகாதார மையங்கள் (CHC) 1,00,0005,00,000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 31100 படுக்கைகளுடன் கூடிய துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 30,00,000 வரையிலான மக்கள்தொகையை உள்ளடக்கிய 101500 படுக்கைகளுடன் கூடிய மாவட்ட மருத்துவமனை ஆகியவை நிறுவப்பட உள்ளன.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களால் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு நிர்வாகத் தரவுகளின் அடிப்படையில், முன்னர் கிராமப்புற சுகாதார புள்ளி விவரங்கள் என்று அழைக்கப்பட்ட இந்திய சுகாதார இயக்கவியல் (HDI) 202223 (உள்கட்டமைப்பு மற்றும் மனித வளங்கள்) 31.03.2023 நிலவரப்படி இந்தியாவில் PHC CHC துணை மாவட்ட மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் 8,18,661 படுக்கைகள் இருப்பதாகக் கூறுகிறது.

தேவை மற்றும் நிதி கிடைக்கும் தன்மைக்கு ஏற்ப தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மாநில/யூனியன் பிரதேசங்களின் (UTs) முதன்மைப் பொறுப்பாகும். இருப்பினும், பல்வேறு திட்டங்கள் மூலம் மக்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவதற்கான முயற்சிகளில் மத்திய அரசு மாநில/யூனியன் பிரதேச அரசுகளுக்கு உதவி செய்கிறது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் திட்ட அமலாக்கத் திட்டங்கள் (PIPs) வடிவில் பெறப்பட்ட திட்டங்களின் அடிப்படையில், பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குகிறது. இந்திய அரசு விதிமுறைகள் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களின்படி இந்த திட்டத்திற்கு நடவடிக்கைப் பதிவு (RoPs) வடிவத்தில் ஒப்புதல் அளிக்கிறது.

PMAyushman Bharat சுகாதார உள்கட்டமைப்பு திட்டம் (PMABHIM): மத்திய நிதியுதவி திட்டத்தின் (CSS) கூறுகளின் கீழ், மாவட்ட மருத்துவமனைகள் அல்லது மருத்துவக் கல்லூரிகளில் 100 மற்றும் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மருத்துவமனை தொகுதிகளுக்கு (CCBs) 202122 முதல் 202526 வரையிலான நிதியாண்டில் 621 CCBகளை அமைப்பதற்காக ரூ. 18,799.21 கோடி நிதியுதவி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

PMABHIM இன் மத்திய துறை கூறுகளின் கீழ், 12 AIIMS மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களில் (INIs) 150 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை தொகுதிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தியா கோவிட்19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பு தயார் நிலை தொகுப்பு II (ECRPII): "இந்தியா கோவிட்19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை தொகுப்பு": கட்டம் II ரூ.23,123 கோடிக்கு. ECRPII மத்திய துறை (CS) மற்றும் மத்திய நிதியுதவி திட்டங்கள் (CSS) கூறுகளைக் கொண்டுள்ளது.

பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (PMSSY): நாட்டில் மலிவு விலையில் மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் கிடைப்பதில் உள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதையும், தரமான மருத்துவக் கல்விக்கான வசதிகளை அதிகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது, அதாவது, (i) அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) அமைத்தல்; மற்றும் (ii) தற்போதுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்/நிறுவனங்களை (GMCIs) மேம்படுத்துதல். இதுவரை 22 புதிய AIIMSகளை அமைப்பதற்கும் GMCIகளை மேம்படுத்துவதற்கான 75 திட்டங்களுக்கும் பல்வேறு கட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் தற்போதுள்ள மாவட்ட/பரிந்துரை மருத்துவமனைகளுடன், நாட்டில் மொத்தம் 157 மருத்துவக் கல்லூரிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

நாடு முழுவதும் சுகாதார விளைவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், நிதி ஆதரவை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.





கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. தளி தெற்கு ஒன்றியத்தில் 70 வாக்குச்சாவடிகளில் தலைமை அறிவித்த 40 சதவீத இலக்கை முடித்து துள்ளனர். உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்ட பிடிஏ முகவர்கள் 70 பேருக்கு தளி தெற்கு ஒன்றிய செயலாளர் திவாகர் ஏற்பாட்டில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., பிடி.ஏ. முகவர்களுக்கு கணினி டேப் மற்றும் சுவர்க்கடிகாரம் பரிசு வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத்தலைவர் நாகராஜ், பொறுப்பாளர் எல்லோரா மணி, துணை செயலாளர்கள் சீனிவாசன், கிருஷ்ணமூர்த்தி உள் ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புகார் கொடுத்த வழக்குரைஞரை சம்பந்தப்பட்ட நீதிபதியே அழைத்து மிரட்டுவது சரியா?

# நீதிமன்றத்தின் மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 28-

மதுரை வழக்குரைஞர் வாஞ்சிநாதன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன்மீது புகார் மனு கொடுத்துள்ளார்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட நீதிபதியே புகார் கொடுத்த வழக்குரைஞரை அழைத்து மிரட்டுவது சரியா?

நீதிமன்றத்தினுடைய மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது! என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 24.7.2025 அன்று நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் போது, அந்த வழக்கிலிருந்து விலகி விட்ட வழக்குரைஞர் வாஞ்சிநாதன் அவர்களுக்கு சம்மன் கொடுத்து நீதிமன்றத்திற்கு மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் அழைத்ததாகவும், அவ்வழக்கில் தற்போது தான் வாதாடவில்லை என்பதை வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தெரிவித்த பிறகு, "இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்" என்று சொல்லி, "ஜாதி ரீதியாக நான் தீர்ப்பு வழங்குவதாக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்களா?" என்று கேள்வி எழுப்பி இருக்கிறார் என்றும் செய்தி வெளிவந்துள்ளது.

இதன் பின்னணியில், கடந்த மாதத்தில் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் அவர்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு, மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் பல்வேறு தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி அனுப்பிய புகார் கடிதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**ஜனநாயகத்தில் நீதிமன்றங்கள் தான் மக்களின் கடைசி நம்பிக்கை!**

வழக்குரைஞரை நேரில் அழைத்து மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் உயர்நீதிமன்ற பதிவாளர் மூலம் நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் கொடுக்கலாமா? உயர்நீதிமன்றத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கக் கூடிய சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அனுமதியோடு இது கொடுக்கப்பட்டிருக்கிறதா?

ஜனநாயகத்தில் நீதிமன்றங்கள் தான் மக்களின் கடைசி நம்பிக்கை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, நீதிபதிகள் பதவியேற்கும் போது ஏற்கும் உறுதி மொழியில், சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல் அவர்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்பது தான் அடிப்படைத் தத்துவமாகும்.

**பலமுறை கண்டனங்கள் எழுந்துள்ளன!**

ஆனால், குறிப்பிட்ட மாண்புமிகு நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் மதுரை கிளையிலும் அளித்த பல தீர்ப்புகளில் ஒரு குறிப்பிட்ட கருத்தியலின் சார்பும், ஜாதியப் பாதுகாப்பு உணர்வும் இருப்பதாக நாங்களே பலமுறை பொது மன்றங்களில் தெரிவித்துள்ளோம்.

ஒருமுறை தேவை இல்லாமல் தந்தை பெரியார் அன்னை மணியம்மையார் திருமணத்தைப் பற்றிப் பேசி கொச்சைப்படுத்தினார். பகுத்தறிவுவாதிகள்பற்றியும் கிண்டலடித்திருக்கிறார்.

**ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்!**


பெரியார் என்பவர் இந்திய அரசால் தாமிரப் பட்டயம் அளித்து கவுரவிக்கப்பட்டவர், நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டு பெருமைப் படுத்தப்பட்ட தலைவர்.

தமிழ்நாட்டின் தந்தை என்று கருதப்படக் கூடியவர். இதே நீதிமன்றத்தில், மாண்பமை நீதிபதி ஒருவரால் "இந்தியாவுக்கு எப்படி மகாத்மா காந்தி அவர்கள் தந்தையோ, அப்படி தமிழ்நாட்டுக்கு தந்தை பெரியார்" என்று வர்ணிக்கப்பட்டவர். சமூக நீதிக்காக இந்திய நாடாளுமன்றத்தில் குறிப்பிடப்பட்டு நன்றி செலுத்தப்பட்டு இருப்பதைப் போலவே, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பிலும் குறிப்பிட ப்பட்ட பெருமைக்குரிய ஒப்பற்ற தலைவர். அப்படிப்பட்ட கோடானுகோடி மக்களுக்கான தலைவரை, சிறிதும் தொடர்பற்ற ஒரு வழக்கில், தான் வழங்கிய தீர்ப்பில் கொச்சைப்படுத்தியதை அப்போதே சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறோம்.

**மனித மாண்புக்கும், அறிவியல் சிந்தனைக்கும் மாறான தீர்ப்பு!**

அது மட்டுமல்லாமல், இன்றைய அறிவியல் யுகத்தில், கருரில் பார்ப்பனர்கள் உண்ட எச்சில் இலையில் பார்ப்பனர் அல்லாதார் உருளும் மனிதத் தன்மையற்ற நிகழ்ச்சி தடை செய்யப்பட்டபோது, அதன் மூலம் சட்டம் - ஒழுங்கைச் சரிசெய்ய அரசு முயற்சித்த போது, அதற்கு எதிராக மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்கள் வழங்கிய தீர்ப்பை சார்பற்றது என்று எப்படி கூறுவது? இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் மனித மாண்புக்கும், அறிவியல் மனப்பான்மைக்கும் (51 ஏஎச்) மாறான தீர்ப்பு என்று அப்போதே சுட்டிக் காட்டி விளக்கியி ருக்கிறோம்.

இந்தியாவைப் பீடித்த



பெரும் சமூக நோயான ஜாதி தீண்டாமை ஒழிப்புக்காக தமிழ்நாடு தி.மு.க. அரசால் அரும்பாடுபட்டு கொண்டுவரப்பட்டது அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டமாகும்.

50 ஆண்டுகள் மக்கள் மன்றங்களிலும் நீதிமன்றங்களிலும் போராடி உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பையும் சாதகமாகப் பெற்றதற்குப் பிறகும், அது தொடர்புடைய பல்வேறு வழக்குகளில் மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் ஒரு சார்பு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த தீர்ப்புகளும் உண்டு. வாஞ்சிநாதன் போன்ற வழக்குரைஞர்கள் இதற்காக வாதாடியும் உள்ளனர்.

மற்றொரு சமூகநீதி சம்பந்தமான வழக்கில் வாதாட வந்த மூத்த வழக்குரைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் அவர்களைப் பார்த்து, மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநான், உரிய மாண்பை மீறி விளித்ததும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய நீதிபதியின் நடத்தையாகும்.

அது மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை இழிவுபடுத்திப் பேசியதாக தொடரப்பட்ட அவதூறு வழக்கில், எப்போதும் தன்னுடைய ஜாதியைப் பெருமையாகப் பேசும் ஒரு பெண் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்படுகிறார். ஓரிரு நாளில் அவர் ஜாமீனில் வெளியே வருவதற்கு உயர்நீதிமன்றத்தை நாடுகிறார். அது விசாரணைக்கு வருகிறது. அந்தச் சமயத்தில் ஒரு செய்தியும் ஊடகங்களில் வெளிவருகிறது.

வழக்கு வேறொரு நீதிபதியிடம் விசாரணைக்கு வருவதற்கு முன்னாலேயே மாண்புமிகு நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் மனைவி, சமூக ஊடகங்களில் அறிக்கை ஒன்றை விடுத்து, ஜாதி உணர்வுடன் பேசிய அந்தப் பெண்ணுக்குப் பச்சாதாபம் தேடிக் கொடுத்த நடைமுறை சரியானதா? அதை நீதிமன்றங்கள் ஏற்குமா?

மாண்பமை நீதிபதி, தன்னுடைய பார்வை எப்படிப்பட்டது, எந்தத் தத்துவத்தை தான் ஏற்று நடந்து வருகிறோம் என்பதை, தாமே பல பொது மேடைகளில் தொடர்ந்து பேசியும் இருக்கிறார்.

இவற்றைச் சுட்டிக்காட்டி இந்தப் போக்கை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதாக மக்கள் மன்றங்களில் எடுத்து விளக்கி இருக்கிறோம். ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரும் இத்தகைய போக்குகளைச் சுட்டிக்காட்டி அதே மேடையில் தனது கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்.

நீதிபதிகளாக நியமிக்க ப்படும் எவருக்கும் தனிப்பட்ட கொள்கைகள் இருக்கலாம். அது அவரவர் உரிமையாகும். ஆனால், நீதிபதியான பிறகு, அந்தக் கொள்கைகள் நீதிமன்றத் தீர்ப்புகளில் பிரதிபலிக்க விடக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தின் மேனாள் நீதிபதி அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் எழுதியிருப்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

இப்படியான பலரும் அறிந்த ஒரு பொது பிரச்சினைக்கு அரசமைப்புச் சட்டப்படியாக வழங்கப்பட்டிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் புகார் அனுப்பினால், அவரை நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறையில் அழைத்து மிரட்டுவது போல் பேசுவது ஏற்கத்தக்கதா?

தன் மீது புகார் கொடுக்கப்பட்டால், மாண்பமை ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள், அதற்குரிய இடத்தில் பதில் விளக்கம் தர வேண்டுமே தவிர, புகார் அளித்தவரை நீதிமன்றத்தில் அழைத்து மிரட்டுவது என்பது எவ்வகையில் சரியானது?

இப்படிப்பட்ட நீதிப் போக்கு சம்பந்தமான குறிப்பிட்ட மாண்பமை நீதிபதியின் நடத்தையை நாங்கள் பொதுமன்றத்தில் எடுத்து விளக்கியிருக்கிறோம் பொது நலக் கண்ணோட்டத்தோடு! அவர் பற்றி தனிப்பட்ட விருப்பு வெறுப்பு எதுவும் கிடை யாது.

நீதிமன்ற எல்லைக்குள்ளேயே தீர்வு காணப்பட வேண்டிய இந்தப் பிரச்சினை, மக்கள் மன்றத்திற்கு வர வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கலாமா?

இது ஒரு வழக்குரைஞர் - நீதிபதி என்பதைத் தாண்டி, மக்கள் மன்றப் போராட்டத்திற்கு வழிவகுக்க விடலாமா?

நீதிமன்றத்தினுடைய மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது என்னும் பொது நோக்கோடு இதனை எழுதுகின்றோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.





முன்னாள் படை வீரர்கள் நலத்துறை சார்பில் தருமபுரி கலைக்கல்லூரி வளாகத்தில் கார்கில் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி மற்றும் எம்.எல்.ஏ க்கள் ஜி.கே.மணி,வெங்கடேஸ்வரன்,கோவிந்தசாமி,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,முன்னாள் ராணுவ படைவீரர்கள் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.